விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 04 செவ்வாய்க்கிழமை (19.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 355

ராம்கோ
RAMCO
RAMCO CEMENT
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## சர்வகட்சி ஆலோசனைக் குழு இவ்வார நடுப்பகுதியில் கூடும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள சர்வ கட்சி ஆலோசனைக்குழு இவ்வார நடுப்பகு தியில் கூடவிருப்பதாக குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இதேவேளை சர்வகட்சி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமய வும் அறிவித்துள்ளன. ஆனால் ஐக்கிய தேசி யக்கட்சி இம் முறை ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதாக அறிவித் துள்ளது.

பெரும்பாலும் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் கலந்து கொள்ளாத நிலையி லேயே இம் முறை சர்வகட்சி ஆலோசனைக் குழுக் கூட்டம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் நத்தார் தினத்தை முன்னிட்டு 24,25 இல் 24 மணி நேர ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

நத்தார் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 24,25 ஆம் திகதிகளில் யாழ்.குடாநாட்டில் 24 மணிநேரமும் ஊரடங்குச் சட்டம் தளர்த் தப்படும் என யாழ்.சிவில் நிர்வாக அலுவல கம் தெரிவித்துள்ளது.

கிறிஸ்தவர்கள் நத்தார் தினத்தன்று இரவு வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. இதேவேளை நேற்று முன்தினம் முதல் யாழ்.குடாநாட்டில் மேலும் நான்கு மணி நேரம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட் டுள்ளது.

இதனடிப்படையில் இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இந்துக்களின் திருவிழாவான திருவெம்பாவை முன்னிட்டு அதிகாலையில் ஊரடங்கு தளர்த்துவது தொடர்பாகவும் ஆலோ சிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

# இலங்கைத் தமிழர் கொல்லப்படுவதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது

## தமிழக முதல்வர் அறிவிப்பு



(சென்னை)

இலங்கையில் தமிழ் மக்கள் கொல் லப்படுவதை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார். சென்னை விழுப் புரத்தில் இலவச நிலம் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு பேசும் பொழுதே அவர் இதனைத் தெரி வித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவைச் சேர்ந்த மூவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கருணா குழுவைச் சேர்ந்த மூவர் அடை யாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு செங்கலடி சந்தைப் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணி யளவில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கொல்லப்பட்ட மூவரும் சந்தையில் பொருட் கள் வாங்கிக் கொண்டிருந்த போது துப்பாக் கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக அப் பகுதி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தில் எம்.கோவிந்தன் என்ற பொதுமகனும் படுகாயமடைந்துள்ளார். படு காயமடைந்த இவர் செங்கலடி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மட்டக் களப்பு போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்ட மூவரும் கருணா குழு வைச் சேர்ந்த இளம் அரசியல்வாதிகள் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## விடுதலைப்புலிகளை தடைசெய்ய அவுஸ்திரேலிய அரசு நடவடிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்வதற்குரிய சில நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச் சர் தெரிவித்துள்ளார். லண்டனில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

புலிகளின் நிதி சேகரிப்பு மற்றும் ஏனைய பல செயற்பாடுகள் பற்றி அவுஸ்திரேலியா வின் புலனாய்வு அமைப்பு வெளியிட்டுள்ள தகவல்களை கவனத்திற்கொண்டே விடு தலைப்புலிகளுக்கு எதிரான இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இன்னும் சில தினங்களில் விடுதலைப் புலிகளை தடைசெய்யும் முடிவினை அவுஸ் திரேலியா வெளியிடுமெனவும் அவர் கூறி னார்.

ஏற்கனவே அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட பல நாடுகள் விடுதலைப்புலிகளை தடைசெய்துள்ளன. (ச)

## கிழக்கிலிருந்து வெளியேறப் போவது தமிழீழ விடுதலைப்புலிகள் அல்ல !

### இளந்திரையன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிழக்கில் எமது பகுதியிலிருந்து எங்களை வெளியேற்ற இராணுவம் திட்டத்தை அறி வித்தால் விடுதலைப்புலிகள் முன்தாக்கு தலைத் தொடங்குவர் என தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்துக்கு எச்சரிக்கை விடுத் துள்ளனர்.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனி தக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என குற்றம் சாட்டிய இராணுவம், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவை அதிர்ச்சிக் குள்ளாக்கும் வகையில் போர் நிறுத்த உடன் பாட்டுக்கு எதிராக கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளை விரட்டுவோம் என தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரின் மோட்டார் மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாகத்தான் வாகரையிலிருந்து பொதுமக்கள் வெளியேறி வருகின்றனர். எறிகணை மற்றும் வான் தாக்குதல்கள் பல அகதி முகாம்களைத் தாக் கியதில் பொதுமக்கள் பெருமளவிலானோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை மக்களின் அவல நிலை குறித்து அனைத்துலக சமூகத்தின் பதில் என்ன?

### விடுதலைப்புலிகள் கேள்வி

(வாகரை)

வாகரையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு திட்டமிட்டுச் செயற்படுகி றது என்பதைப் புரிந்து கொள்வதற்கு எவ ரும் ஏவுகணை விஞ்ஞானம் படிக்க வேண் டியதில்லை. வாகரையைத் தன்வசமாகும் திட்டத்தில் அரசு அனைத்துலக விதிமுறைக ளை மீறியதுடன் மனிதாபிமான வேண்டு கோள்களையும் நிராகரித்துள்ளது என விடு தலைப்புலிகளின் சமாதான செயலகம் அறிக்கை விடுத்துள்ளது.

வாகரையில் உள்ள மக்கள் நல சேவை புரியும் இடங்களை மட்டக்களப்புக்கான அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கப் பிரதி நிதி காசேசி மார்யத்தை ,விடுதலைப்புலி களின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கடந்த ஒக் டோபர் மாத நடுப்பகுதியில் அழைத்துச் சென்று காண்பித்தார்.

வாகரை மருத்துவமனை, வம்மிவெட்டு வான் பாடசாலை , பற்சேனை பாடசாலை , கதிரவெளி பாடசாலை ,வெருகல் கோயில் ஆகிய இடங்கள், வாகரையில் தங்கியுள்ள அகதிகளுக்கான நலசேவை இடங்கள் இவற் றைப் பாதுகாப்பானதாக ஆக்க வேண்டு என எழிலன் காசேசி மார்யத்திடம் கோரிக் கை விடுத்திருந்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## படுகாயமடைந்த சிறுமி நேற்று உயிரிழப்பு

யாழ்.கொட்டடிச் சந்தைப் பகுதியில் கடந்த 6 ஆம் திகதி இடம் பெற்ற கிளைமோர்த் தாக் குதலில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி நேற்று உயிரிழந்தார்.

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சாந்தன் சர்மிளா (வயது 3) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார். இது தொடர்பாக விசா ரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட பதில் நீதிவான் திருநாவுக்கரசு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தர விட்டார். இச் சம்பவத்தில் புங்குடுதீவைச் சேர்ந்த மூவர் உயிரிழந்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் காயம்

அநுராதபுரம் நாச்சாத்துவப் பகுதியில் இனந்தெரியாத குழுவினர் நடத்திய தாக்குதலில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரும் ஊர் காவற்படை வீரர் இருவரும் காயமடைந்துள்ளனர்.

நாச்சாத்துவ வாவி அருகில் காவற்கடமையில் ஈடுபட்ட பொலிஸாரே நேற்று முன்தினம் ஒரு குழுவினரால் தாக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரைத் தாக்கியவர்கள் குடிபோதையில் இருந்ததாக கிணுகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-9)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையினரால் இன்று பிற்பகல் 2 மணிக்கு நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் சிக்கின்குனியாவால் பாதிக்கப்பட்டவர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என கோப்பாய்ப் பிரிவின் செயலாளர் மயில்வாகனம் அறிவித்துள்ளார். (ச-134)

## பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பதிவுகள் ஆரம்பம்

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணிப் பட்டப் படிப்புப் பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக புதிய உயர் கல்லூரி இயக்குநர் அருள்நங்கை தெரிவித்தார். இறுதிப் பதிவுத் திகதி ஜனவரி 20 ஆம் திகதி எனவும் அவர் தெரிவித்தார். (ச)

## உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ச)

## தேசிய கல்வியியற் கல்லூரி உத்தியோகஸ்தர் வேதனம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான மார்கழி மாத வேதனம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணிக்குக் கல்வியியற் கல்லூரியில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளை மூலமாக வழங்கப்பட்வுள்ளதாக உப பீடாதிபதி எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ச)

# 'சுனாமி' நினைவு தினத்தன்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இலங்கையை கடுமையாகப் பாதித்த சுனாமி ஆழிப் பேரலை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றை நினைவுகூர்ந்து அவற்றால் மரணமுற்றோருக்கு ஆத்ம சாந்தியை வேண்டிப்பிரார்த்திக்கும் வகையில் டிசம்பர் 26 ஆம் திகதியை தேசிய பாதுகாப்புத் தினமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

இதனை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கையின் அனைத்துச்சமயத் தலங்களிலும் பிரார்த்தனைகளை நடத்துவதற்கு மத விவகார அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய சுனாமி ஆழிப் பேரலை மற்றும் இயற்கை அனர்த்தங்களால் மரணமுற்ற அனைவரது ஆத்ம சாந்திக்காகவும் இலங்கையின் அனைத்து இந்து மதக் கோவில்களிலும் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 9.25 மணி முதல் 9.27 மணிவரை இடைவிடாது ஆலய மணிகளை ஒலிக்கச் செய்யுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வேண்டிக் கொள்கின்றது.

இதேவேளை இலங்கைப் பிரஜைகள் அனைவரும் முற்பகல் 9.25 மணி தொடக்கம் 9.27 மணி வரை அமையும் 2நிமிடமும் மௌன அஞ்சலி செலுத்துமாறும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜே/61 நெடுங்குளம், ஜே/62, ஜே/63 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான பங்கீட்டு அட்டைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்குக் கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய மண்டபத்தில் மீளாய்வு செய்யப்படும்.

பிரதான குடியிருப்பாளர்கள் பங்கீட்டு அட்டை , குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு பிரதேச செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (ச)

## திருவெம்பாவை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் திருவெம்பாவை எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5.15 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் மூன்றாம் திகதி பத்தாம் நாளான அன்று காலை 5 மணிக்கு ஆருத்திரா அபிஷேகம் நடைபெற்று ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (எ-9)

# மீள் கேள்வி அறிவித்தல்-2007.

## யாழ்ப்பாணம் மாநகர சபை

*சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2007.*

கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரி நீங்கலாக) - ரூ.300/=
கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி - 18.12.2006 தொடக்கம் 22.12.2006 வரை
கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளும் திகதி - 22.12.2006 பிற்பகல் 2.30 மணிவரை
கேள்விகள் திறக்கும் திகதி - 26.12.2006 முற்பகல் 11 மணிக்கு
குத்தகைக் காலம் - 2007.01.01 தொடக்கம் 2007.12.31 வரை

*குறிப்பு:-* மேலதிக விபரங்களை யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரம் *16.11.2006* ஆம் திகதிய உதயன் பத்திரிகையில்(நிபந்தனைகள் யாவும்) பிரசுரிக்கப்பட்டுள்ளது.

| தொ. இல. | பொதுச் சந்தைகள் | படிவக் கட்டணம் வற் வரி நீங்கலாக | மீளளிக்க கூடிய கேள்விப் பிணைப் பணம் | 2007 |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை மீன் சந்தை | 300.00 | 1000.00 | 1867800.00 |
| 02. | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 300.00 | 1000.00 | 635690.00 |
| 03. | செங்குந்தா சந்தை | 300.00 | 1000.00 | 586234.00 |
| 04. | குருநகர் சந்தை | 300.00 | 1000.00 | 1036970.00 |
| 05. | நாவாந்துறை சந்தை | 300.00 | 1000.00 | 316800.00 |
| 06. | பாசையூர் சந்தை | 300.00 | 2500.00 | 47500,00 |
| 07. | அரியாலைச் சந்தை | 300.00 | 2500.00 | 77001.00 |
| 08. | புங்கங்குளம் சந்தை | 300.00 | 1000.00 | 3300.00 |
| 09. | கொழும்புத்துறைச்சந்தை | 300.00 | 1000.00 | 16500.00 |
| 10. | வீதியோர வாகனத்தரிப்பிடம் | 300.00 | 3000.00 | 400000.00 |
| 11. | நடைபாதை வியாபாரிகள் சந்தை | 300.00 | 3000.00 | 1416000.00 |

| தொ. இல. | இறைச்சிக் கடைகள் | படிவக் கட்டணம் வற் வரி நீங்கலாக | மீளளிக்க கூடிய கேள்விப் பிணைப் பணம் | 2007 |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.1 | 300.00 | 2500.00 | 79200.00 |
| 02. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.3 | 300.00 | 2500.00 | 88145.00 |
| 03. | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை இல.5 | 300.00 | 2500.00 | 45100.00 |
| 04. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.6 | 300.00 | 2500.00 | 45749.00 |
| 05. | பண்ணைக் கோழிக் கடை இல.7 | 300.00 | 2500.00 | 42625.00 |
| 06. | அரியாலை மாட்டிறைச்சிக் கடை இல.1 | 300.00 | 2500.00 | 185750.00 |
| 07. | அரியாலை ஆட்டிறைச்சிக் கடை இல.2 | 300.00 | 2500.00 | 36000.00 |
| 08. | புங்கங்குளம் மாட்டிறைச்சிக் கடை இல.1 | 300.00 | 2500.00 | 170500.00 |
| 09. | புங்கங்குளம் ஆட்டிறைச்சிக் கடை இல.2 | 300.00 | 2500.00 | 40400.00 |
| 10. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.2 | 300.00 | 2500.00 | 113000.00 |
| 11. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.3 | 300.00 | 2500.00 | 71500.00 |
| 12. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.4 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 13. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.5 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 14. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.6 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 15. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.7 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 16. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.8 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 17. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.9 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 18. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை இல.10 | 300.00 | 2500.00 | 10000.00 |
| 19. | நாவாந்துறை கருவாட்டுக் கடை இல.11 | 300.00 | 1000.00 | 10000.00 |
| 20. | நாவாந்துறை கருவாட்டுக் கடை இல.12 | 300.00 | 1000.00 | 10000.00 |
| 21. | நரிக்குன்று மாட்டிறைச்சிக் கடை இல.1 | 300.00 | 5000.00 | 275000.00 |
| 22. | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை இல.2 | 300.00 | 2500.00 | 111700.00 |
| 23. | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக் கடை இல.1 | 300.00 | 2500.00 | 31570.00 |

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்
15.12.2006

(C-565)

# பதவி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் துஷ்பிரயோக நடவடிக்கையில்!

## யாழ்.மாநகர சபை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் கடமையாற்றி பதவி நீக்கம் செய்யப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர் ஒருவர் துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகப் பொதுமக்கள் முறையிட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஒழுங்கீனம் காரணமாக யாழ். மாநகர சபையால் பதவி நீக்கம் செய்யப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர் ஒருவர் தனது சீருடையையும் அடையாள அட்டையையும் மாநகர சபை நிர்வாகத்திடம் ஒப்படைக்காமல் அவற்றைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மண்வெட்டி, அலவாங்கு முதலிய பொருள்களை பெற்று அவற்றுடன் அவர் தலைமறைவாகி விடுவதாகவும் இத்தகையோரிடம் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் யாழ்.மாநகர சபை நிர்வாகம் பொது மக்களைக் கேட்டுள்ளது.

வீடுகளில் மாத்திரமன்றி அரச நிறுவனங்களிடமும் குறித்த நபர் பொருள்களைப் பெற்றுள்ளதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்படுவது வழக்கம். பொதுமக் களிடம் அப் பொருள்களை இரவலாகப் பெற வேண்டிய அவசியம் இல்லை எனவும் நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-133)

# கால்நடை தீவன விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கான தீவனங்கள் அவ்வப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாகவே பதிவு செய்யப்பட்ட கால்நடைப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பெற்றுக் கொண்ட கால்நடைத் தீவனங்களைச் சில பண்ணையாளர்கள் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்து வருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

எனவே இந்த நடவடிக்கை தொடரும் பட்சத்தில் அப் பண்ணையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு இத்தீவனங்களை வாங்கி விற்பனை செய்யும் வியாபாரத் ஸ்தாபனங்கள் மீதும் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (ச)

# முட்டையின் விலையை நிர்ணயிக்க உதவிப் பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போது கோழிப் பண்ணையாளர்களுக்கு அவரவர் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமூடாக கோழித் தீவனம் கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்யப்படுகின்றது.

இதனால் முட்டை உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனாலும் முட்டை விலையில் இதுவரை எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

இக் கட்டான இக் கால சூழ்நிலையில் முட்டையின் விலையைக் குறைப்பது எமது கடமையாகும். எனவே கோழிப் பண்ணை உரிமையாளர்கள் தங்களது பண்ணையின் வாசலில் முட்டையின்விலையை விளம்பரப்படுத்தல் அவசியமாகும்.

இந்த நடவடிக்கையினை பின்பற்றத் தவறும் பண்ணையாளர்களுக்கு அடுத்த கட்ட கோழித் தீவனம் விநியோகம் பற்றி மீள் பரிசீலனை செய்யப்படும் என அறியத் தருகின்றேன் என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (ச)

தவறைச் சரிப்படுத்திக் கொள்ள பிரயாசைப்படுவதால் அவமானம் கிடையாது.

-ராஜாஜி

வலம்புரி

# கடற்றொழிலுக்கான அனுமதியை தாராளமயப்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணத்தில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு மற்றும் வேகமாகப் பரவி வரும் சிக்கின்குனியா போன்றவற்றினால் குடாநாட்டு மக்களின் போசாக்கு நிலை மிகவும் மோசமாகவேயுள்ளது.

சிக்கின்குனியாவின் தாக்கத்தினால் ஏற்பட்ட மரணங்களை சுகாதாரப் பிரிவினர் மூடி மறைக்க எத்தனிப்பது எதற்காக என்பது புரியாத விடயமாக இருப்பினும், சிக்கின்குனியாவில் இறந்தவர்களின் தொகையை பொதுமக்கள் ஓரளவுக்கு ஊகித்துக் கொள்வர்.

குறிப்பாக ஒரு வயதைக் கடந்தவர்கள் அதாவது அறுபது வயதைக் கடந்தவர்களை சிக்கின்குனியா தாக்குகின்றபோது அதன் முடிபு மரணமாகவேயிருக்கின்றது.

சிக்கின்குனியாவுடன் ஏற்கனவே இருந்த நோய்த் தாக்கமும் சேர்ந்து மரணத்தை விளைவித்து விடுவதாக இருக்கலாம்.

எதுவாயினும் மரணத்துக்கான காரணம் சிக்கின்குனியா என்பது மறுக்க முடியாத உண்மை. எனினும் அந்த உண்மைகளைச் சொல்வதில் சுகாதாரப் பிரிவினர் பின்னடிப்பது அவ்வளவு நல்லதல்ல.

ஏனெனில், தமிழகத்திலும் சிக்கின்குனியா வேகமாகப் பரவியிருந்தது. இதன்போது அங்கு மரணம் ஏற்பட்டதை சுகாதார அமைப்புக்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலும் நாளுக்கு நாள் மரணம் மலிந்து கொண்டே போகின்றது. போசாக்கு நிலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, மனத்தாக்கம் போன்றவை காரணமாக வாழக் கூடியவர்களும் திடீரென இந்த மண்ணை விட்டுப் போய் விடுகின்றனர்.

இந்தத் துயரத்தின் மத்தியில் குடாநாட்டு மக்களின் போசாக்கு நிலையைப் பேணுவதற்கு உதவுங்கள் என்ற கோரிக்கை பலமாகவே எழுகின்றது.

யாழ்ப்பாணத்து மக்களின் போசாக்கு நிலையைப் பேணுவதற்கான முதல் வழி கடற்றொழிலுக்கான அனுமதியைத் தாராளமயப்படுத்துவதாகும்.

கடற்றொழிலுக்குச் செல்வதற்கான தடைகளை அகற்றுவதன் மூலம் கடலுணவைத் தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

மக்கள் தமது போசாக்கு மட்டத்தைப் பேணிக் கொள்வதற்கான உடனடிய வழியாகவிருக்கும். அதேநேரம் சந்தைக்கு வருகின்ற கடலுணவைத் திட்டமிட்டு விலையுயர்த்தி விற்பனை செய்யும் கயமைத்தனத்தை நிறுத்த உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறின் பொதுமக்கள் சட்டத்தைத் தமது கையில் எடுத்துக் கொள்வர். அதன் பின்னர் ஓடித் திரிவதில் எந்த அர்த்தமுமேயிருக்க முடியாது.

எனவே கடற்றொழிலுக்குச் செல்வதற்கான அனுமதியை தாராளமாக வழங்கும் அதேநேரம் மீன் சந்தை வியாபாரிகள் நீதியான-நியாயமான விலையில் விற்பனை செய்வதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஏறிய விலை யாழ்.குடாநாட்டில் இறங்காது என்ற கலாசாரத்தை மீன் சந்தை வியாபாரிகளும் கடைப்பிடிக்க முற்படுகின்றது தெரிகின்றது.

இதற்குப் பொதுமக்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஒருபோதும் அனுமதி வழங்கலாகாது என்பதே அனைவரதும் விருப்பமாகும்.

# பாலாவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் நாளை துக்கதினம்

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாளை யாழ்ப்பாணத்தில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு குழப்பம் ஏற்படாமல் அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி அமைதியாக கண்ணீர் அஞ்சலியை செலுத்துமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகக் கடந்த மூன்று தசாப்த காலமாக குரல் கொடுத்த தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் வணக்கங்களைத் தெரிவிக்கும் முகமாக நாளை யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் பூரண துக்க தினமாக கடைப்பிடிப்போம்.

இதனூடாக எமது அஞ்சலிகளை எமக்காக உழைத்த கல்விமானும் தத்துவாசிரியரும் தமிழ் பேசும் மக்களின் விடுதலை விரும்பியுமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# பாலா அண்ணனின் ஆளுமை, ஆற்றல் மிகப் பெரும் வல்லமை கொண்டது

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எமது போராட்டத் தீர்மானங்களாகவிருக்கலாம் அரசியல் முடிபுகளாகவிருக்கலாம் எமது இயக்கத்தின் போராளிகளின் சாதாரண வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்துவதில் கூட பாலா அண்ணாவிற்கு பெரும் பங்கு இருந்திருக்கின்றது.

அவரின் செயற்பாடுகள் எல்லாப் பக்கங்களுக்கும் விரிந்ததாகவிருந்தது. அவருடைய ஆற்றல், ஆளுமை என்பது மிகப் பெரிய வல்லமை கொண்டது என அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவு குறித்து அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

பாலா அண்ணாவினுடைய செயல்கள் எல்லாவற்றையுமே தலைவரின் எண்ணத்துக்குள்ளாலும் ஆழ் மனதுக்குள்ளாலும் வந்த தேசத்தின் குரல் என்கின்ற அந்த உயர் கௌரவம் ஆணித்தரமாக வெளிப்படுத்துகின்றது.

அந்த மாதிரியான ஒரு தேசத்தின் குரலாகவே பாலா அண்ணனுடைய வாழ்க்கைக் காலம் அமைந்திருக்கின்றது. அந்தளவுக்கு எமது தலைவரின் எண்ணங்களைச் சுமந்தவராகவும் போராட்ட இலட்சியப் பற்றுறுதி கொண்டவராகவும் அவர் இருந்தார்.

எமது தேசியத் தலைவரின் உற்ற நண்பனாகவும் உற்ற தோழனாகவும் ஒரு மூத்த சகோதரனாகவும் இருந்து எமது விடுதலை இயக்கத்தின் ஆரம்பம் தொட்டே இன்று வரை எமது போராளிகளாலும் எமது மக்களாலும் நேசிக்கப்பட்டு பாலா அண்ணா என அன்போடும் பாசத்தோடும் அழைக்கப்பட்டு வந்த அன்ரன் பாலசிங்கம் இன்று எங்களோடு இல்லை.

அவர் மறைந்த நிகழ்வானது ஒட்டுமொத்த தமிழர் தேசத்திலும் ஒரு பெரிய சோக நிகழ்வாக மாறியிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# இராணுவ வைத்தியப் பிரிவால் மக்களுக்கு வைத்திய உதவி

## ஊடகப் பிரிவு தெரிவிப்பு

யாழ்ப்பாணப் பகுதியில் அமைந்துள்ள 513 கட்டளையிடும் தலைமையகத்தின் கீழ் இயங்கும் படைப்பிரிவின் அருகாமையிலுள்ள கிராமங்களான ஆனைக்கோட்டை , நவாலி, மானிப்பாய், சுதுமலை, சாவற்காடு, சண்டிலிப்பாய் உட்பட ஆறு கிராமங்களில் வாழும் மக்களுக்காக மானிப்பாய்ப்பகுதியில் நேற்று முன்தினம் காலையிலிருந்து இராணுவ வைத்திய பிரிவினரால் வைத்திய உதவிகள் வழங்கப்பட்டதாக பல்லாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இந்த வைத்திய முகாம் மானிப்பாய்ப் பெண்கள் பாடசாலையில் 500 பேர் அளவில் வைத்திய உதவிகளைப் பெற்றுக் கொண்டதுடன் அதற்காக இராணுவ வைத்தியசாலையும் விசேட வைத்திய நிபுணர்கள் 2 பேர் அடங்கிய 4 வைத்தியர்கள் கலந்து கொண்டு அந்தந்த நோயாளர்களைப் பரிசோதித்து சிகிச்சையளித்தனர்.

அதன்பின் அவர்களுக்கு தேவையான மருந்து வகைகளும் ஆயிரம் சமைக்கப்பட்ட உணவுப் பாசல்களும் வழங்கப்பட்டன.

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனைக்கும் வழிகாட்டலின்படியும் இராணுவ வைத்திய சேவா அதிகாரிக்கு அறிவித்ததும் அதற்கேற்ப இந்த வைத்திய முகாமுக்குத் தேவையான வைத்தியர்களையும் பலாலி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததாக தெரிவிக்கப்பட்டது. (சு)

# கணவர் இல்லாத குடும்பப் பெண்களின் துயர் துடைக்கும் வேலைத் திட்டம் ஆரம்பம்

## சமூக நலத்துறை அமைச்சு தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் கணவரை இழந்த, கணவரால் கைவிடப்பட்ட 40 வயதுக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருகின்ற குடும்பப் பெண்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கில் சமூக சேவைகள் மற்றும்சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வரும் சுயதொழில் வாய்ப்புக்கான நிதி உதவி வழங்கும் திட்டம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர்ப்பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கு இந்நிதி உதவிகள் வழங்கப்பட்டதுடன் நேற்று நிதி உதவிகள் பெறாத இனங்காணப்பட்டுள்ள இப் பிரதேச செயலர் பிரிவுகளைச் சார்ந்த மேலும் பலருக்கு விரைவில் நிதி உதவிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதேநேரம் நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்த மேற்படி பெண்களுக்கான நிதி உதவிகள் அமைச்சரால் வழங்கப்படவுள்ளன. நிதி உதவிகளைப் பெற யாழ்.அலுவலகத்திற்கு வருகை தருகிறவர்கள் தங்களது அடையாள அட்டைகளையும் பங்கீட்டு அட்டையையும் கைவசம் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (சு)

# காமராஜர் பல்கலைக்கழக பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் எம்.ஏ., எம்.கொம், எம்.பி.ஏ, எம்.எஸ்.சி., எம்.பிஎல்., பி.ஏ.,பி.எஸ்.சி பரீட்சைகள் இவ்வாண்டு முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி குறிப்பிட்ட பரீட்சைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் இப் பரீட்சைக்கு 40 ற்கும் மேற்பட்டவர்கள் தோற்றவுள்ளதாகவும் மேற்படி பல்கலைக்கழகத்தின் யாழ்.இணைப்பாளரும் புதிய உயர் கல்லூரியின் நிர்வாகியுமான அருள்நங்கை தெரிவித்துள்ளார். (ச-133)

# கிற் காட்டிற்கு திடீர் மவுசு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கிற் காட்டிற்கு மவுசு ஏற்பட்டுள்ளது. யாழ்.குடாநாட்டில் டயலொக் மற்றும் மொபிட்டல் நிறுவனத்தின் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வெளியான செய்தியையடுத்து இந்நிலை ஏற்பட்டுள்ளது.

கிற்காட் விற்பனை செய்யும் கடைகளுக்கு முன்பாக கூடியவர்கள் அதனைப் பெருமளவில் கொள்வனவு செய்தமையையும் காணக் கூடியதாக இருந்தது.

இதேவேளை இவ் வாரத்தில் கைத்தொலைபேசிகளுக்கான இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (சு)

# கலாநிதி பாலசிங்கத்தின் மறைவுக்கு பல்கலை ஆசிரியர் சங்கம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

தமிழ் மீதும் தமிழ் பேசும் மக்கள் மீதும் அக்கறையினையும் மிதவாத அரசியல் பாங்கினையும் கொண்ட கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பு தமிழ் பேசும் மக்களிற்கு பேரிழப்பாகும் .அவரது இழப்பிற்குத் துயர் பகிர்கின்றோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (சு)

# மதுரையிலிருந்து உணவுப் பொருட்களுடன் கப்பலை யாழ். அனுப்ப நடவடிக்கை

3500 மெற்றிக் தொன் அத்தியாவசிய பொருட்களடங்கிய கப்பலை மதுரையிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு சதொச நடவடிக்கை எடுத்துள்ளது.

குடாநாட்டு மக்களின் தேவை கருதி முதற் தடவையாக மதுரையிலிருந்து யாழ்ப்பாணம் அனுப்பப்படவுள்ள கப்பலில் சீனி, பருப்பு,செத்தல் மிளகாய்,உருளைக்கிழங்கு மற்றும் பல்வேறு பட்ட பலசரக்குப் பொருட்கள், உள்ளடங்குவதாக சதொச நிலைய உயர் அதிகாரி ஒருவரான நலீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்திய அரசின் ஒத்துழைப்புடன் அத்தியாவசிய பொருட்களுக்கான ஆணையாளர் காரியாலயம் ,சமூக சேவை மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் ஒத்துழைப்புடன் அனுப்பப்படும் மேற்படி பொருட்களடங்கிய மர்க்றுகுணு கப்பல் எதிர்வரும் 22 ஆம் திகதி மதுரையிலிருந்து புறப்படவுள்ளதாக அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஏ)

# ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் வாகரை மக்களுக்கு உடனடி உதவி

(கொழும்பு)

வாகரையில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களின் நலன்பேணும் நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த உத்தரவின் பேரில் அந்த மக்களுக்குத் தேவையான அனைத்து விதமான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து வரும் மக்களுக்குத் தேவையான தங்குமிடம், உணவு சுகாதாரம் போன்ற வசதிகளை செய்து கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்.

இடம் பெயர்வோரின் தொகை தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் அவர்களுக்கான முகாம்களை மேலும் அமைப்பது பற்றியும் அமைச்சு அதிகாரிகள் மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கான உணவினை தொடர்ச்சியாக வழங்கும் பொருட்டு வெலிக்கந்தை மற்றும் பொலநறுவை ஆகிய பகுதிகளில் களஞ்சிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு போதியளவு உணவு வகைகள் கையிருப்பில் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட பல்வேறு தொண்டர் நிறுவனங்களின் அமைப்புக்களுடன் இடம் பெயர்ந்தோரின் நலன் தொடர்பாக பேச்சுக்கள் இடம் பெற்றதாகவும் அதன் அடிப்படையில் பல நிறுவனங்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# மோதல்களினால் இடம்பெயர்ந்தோருக்கு யப்பான் மனிதாபிமான உதவிகள் வழங்கும்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்தோருக்கு மனிதாபிமான ரீதியில் உதவிகள் வழங்க யப்பான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சேருநுவர கல்லாறு மற்றும் வாகரை பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்த சுமார் 30 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்களுக்கே மேற்படி உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அதற்கான அனுமதி யப்பான் அரசின் கபினட் குழு வழங்கியுள்ளதாகவும் சர்வதேச ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

தற்பொழுது அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளோருக்கு 10 ஆயிரம் பாய்கள்,10 ஆயிரம் நீர்த்தாங்கிகள் மற்றும் 10 ஆயிரம் பிளாஸ்டிக் கூரைத் தகடுகளை வழங்க யப்பான் அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது யப்பான் அரசு ஐக்கிய நாடுகள் சபையின் இடம் பெயர்ந்தோருக்கான சபைக்குழு மற்றும் தேசிய அபிவிருத்திக்கான அமைச்சு போன்றவற்றின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தவுள்ளதாக சர்வதேச ஊடக நிலையம் மேலும் தெரிவித்தது. (ச-5)

# ஜனாதிபதியின் மகனுக்கு திருகோணமலையில் பயிற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யொஷித்த ராஜபக்ஷ கடற்படையில் அண்மையில் இணைந்துகொண்டதையடுத்து பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை சீனக்குடா கடற்படைப் பயிற்சித் தளத்தில் தனது பயிற்சியினை ஆரம்பிப்பதற்கு முன்பதாக தனது பெற்றோரிடம் நேற்று முன்தினம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

இந்நாட்டில் எந்தவொரு அரசியல்வாதியும் இதுவரையில் தனது பிள்ளையை நாட்டின் பாதுகாப்புப் படையில் சேர்த்ததாக வரலாறு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ச)

# டிசம்பர் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினம்

## அரசாங்கம் அறிவிப்பு

எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் சுனாமி கடற் சீற்றம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடையவுள்ளது. இந்த இரண்டாம் ஆண்டை நினைவு கூரும் வகையில் அன்றைய தினத்தை தேசிய பாதுகாப்புத் தினமாக அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் இடம் பெறும் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டும் வகையில் தேசிய பாதுகாப்பு தினத்தன்று பல்வேறு நிகழ்வுகள் நாடளாவிய ரீதியாக இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வுகளின் மூலம் பொதுமக்கள் அனர்த்தம் ஏற்படும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விபரங்களைப் பெறமுடியுமென அனர்த்த மற்றும் முகாமைத்துவம் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை அனர்த்தங்களின் போது எவ்வாறு மக்களை பாதுகாப்பதென்பது தொடர்பாக சிரேஷ்ட உயர் அதிகாரிகள் பதில் அதிகாரிகளுக்கு தேசிய அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் விசேட செயலமர்வுகளின் ஊடாக விளக்கமூட்டி வருகின்றன.

இயற்கை அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்படும் மட்டு.மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த செயலமர்வு நடத்தப்பட்டது. (ச-133)

# கிழக்கிலிருந்து வெளியேறப்...

பொதுமக்களை நாங்கள் கட்டா யப்படுத்தி அவர்களைப் பிடித்து வைக்கவில் லை என்று ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

மேலும் அப் பகுதியைச் சேர்ந்த சிலரும் விடுதலைப்புலிகள், பொதுமக்களை கட்டாயமாகப் பிடித்து வைக்கவில்லை என்றே சாட்சி கூறியுள்ளனர்.

வாகரையில் தொடரும் மனிதாபிமானம் அற்ற தாக்குதல்களால் இதுவரை 17ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் அப் பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனர். கடல் வழியாகவும் காட்டுப் பாதை வழியாகவும் பல சிரமங்களுக்கிடையே பொதுமக்கள் வாகரையிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

வாகரையிலிருந்து வெளியேற்றும் இராணுவத்தின் திட்டம் ,விடுதலைப்புலிகளை வெளியேற்றும் திட்டமல்ல, அங்கு இடம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை வெளியேற்றும் திட்டமே என்றும் இளந்திரையன் தெரிவித்துள்ளார். (ஏ-1)

# காத்தான்குடி நகரிலிருந்து அதிரடிப்படையினர் வாபஸ்

காத்தான்குடி நகரில் கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக குவிக்கப்பட்டிருந்த பெருமளவிலான பொலிஸார் ,இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி இஸ்லாத்திற்கு விரோதமான கருத்துக்களைத் தெரிவித்த அப்துல்லா பயில்வானின் சடலத்தை தோண்டி எடுக்குமாறு கோரி தொடர்ச்சியாக ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு கலவரங்கள் அங்கு இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்ற உத்தரவின் பேரில் பயில்வானின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு வேறு இடத்தில் புதைக்கப்பட்டதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸார், இராணுவத்தினர் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

தற்போது நகரில் பூரண அமைதி நிலவி வருவதுடன் பணிகளும் வழமைக்குத்திரும்பியுள்ளன. கடந்த சில தினங்களாக அங்கு ஏற்பட்ட தொடர் கலவரங்களினால் 50 இற்கும் அதிகமான வீடுகள் தீயிட்டுக்கொளுத்தப்பட்டுள்ளன.

8கடைகள் ,4 வங்கிகள் ஒரு பஸ், பல வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.இச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டு 6 பேர் படுகாயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வாகரை மக்களின் அவல...

இந்த குறிப்புக்களை காசேசி மார்யம் இராணுவத்திடம் ஒப்படைத்து இவை பாதுகாப்பு வலயங்களாக பேணப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அப்படி இருந்தும் இந்தப் பகுதிகளில் இராணுவம் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

தாக்குதல்களில் 89 மக்கள் பலியாகியுள்ளனர். இவை போர் நிறுத்த உடன்பாட்டை கடுமையாக மீறுவதாகும் என அந்த அறிக்கையில் விளக்கியுள்ளது.

வாகரையில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும்பொதுமக்களும் சம்பூரில் இருந்து இடம் பெயர்ந்த பொதுமக்களும் தற்போது வாகரையில் வாழ்ந்து வருகின்றனர். இராணுவம் தனது பயங்கரவாத கொடுந் தாக்குதல்களால் வாகரை மக்களையும் அங்கிருந்து இடம் பெயரத் தூண்டுகின்றது.

பொது மக்களை வாகரையில் இருந்து முற்றாக வெளியேற்றுவதே இராணுவத்தின் நோக்கம். போர் தொடர்புடைய காரணங்களுக்காக தங்களது சொந்த இடத்தில் இருந்து பொது மக்கள் வெளியேற கட்டாயப்படுத்தக் கூடாது என்ற போர் நிறுத்த உடன்பாட்டில் 17.2 வது சரத்தை இலங்கை அரசு மீறிவிட்டது என அறிக்கை கூறுகிறது.

இராணுவத்தினரின் பகுதிகளுக்குள் செல்ல வாகரைப் பொதுமக்கள் அச்சப்படுகின்றனர். குறிப்பாக துணை இராணுவக் குழுவான கருணா குழுவினர் மீது பொதுமக்கள் பீதிகொண்டுள்ளனர். ஏனெனில் வாகரைப் பொதுமக்கள் விடுதலைப்புலிகள் என்ற நோக்கிலேயே பார்க்கப்படுவார்கள்.

இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்களுக்கு அஞ்சி வாழ்ந்த பொதுமக்கள் இப்போது மீண்டும் இடம் பெயர கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். அச்சத்தில் வாழும் இந்தப் பொதுமக்களை அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுப்புவதுதான் அனைத்துலக சமூகத்தின் பதிலா ? என அறிக்கை மூலம் சாடியுள்ளது.வாகரையில் இருந்து வெளியேற பொது மக்களாகவே முடிபு செய்தாலும் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான பாதையை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் ஏற் படுத்தித் தரவில்லை. பொதுமக்கள் ஆபத்தான கடல், காட்டு வழிகளில் பயணம் செய்கின்றனர். இதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.

வாகரையில் வாழும் பொதுமக்களுக்கு பாதுகாப்பான வசிப்பிடத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற சி.எழிலனின் கோரிக்கையைத் தொடர்ந்து பல சந்தர்ப்பங்களில் விடுதலைப்புலிகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது எனக் குறிப்பிடும் அந்த அறிக்கை அந்த முயற்சிகளை விவரித்துள்ளது. (ச)

# சர்வகட்சி ஆலோசனைக் குழு...

நடைபெறும் என்று கூறப்படு கின்றது.

சர்வகட்சி ஆலோசனை குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழு அண்மையில் அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகள் சிலவற்றை முன்வைத்தன.

இந் நிலையில் புத்திஜீவிகள் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் சமர்ப்பித்த யோசனையை எதிர்த்து ஜே.வி.பி. சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் இருந்து கடந்த வாரம் விலகியிருந்தது.

இதேவேளை அரசாங்கத்துடன் ஐக்கிய தேசியக்கட்சி செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சர்வகட்சி ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ள தமது கட்சி முடிவெடுத்ததாக ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக அமைச்சர் திஸ்ஸ விதாரண மேலும் கருத்துத் தெரிவிக்கையில் எப்படி இருப்பினும் அனைத்து அரசியல்கட்சிகளுக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் கட்சிகளும் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் என்று நம்புகின்றோம். இம் முறை கூட்டத்தில் என்ன விடயங்கள் தொடர்பாக ஆராயப்படும் என்று தற்போது கூறமுடியாது. பல விடயங்கள் குறித்து ஆராயவுள்ளோம் என்றார். (ச-5)

# இலங்கைத் தமிழர்...

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், துணைக் கண்டமான இந்தியாவுக்கு கண்டம் வராமல் பாதுகாக்க வேண்டும்.

பக்கத்து நாட்டினால் கண்டம் வரக்கூடாது என்பதற்காகத்தான் சிந்தித்துச் செயல்படுகிறோம். இலங்கைப் பிரச்சினையில் இதே நிலையைக் கையாளுகிறோம்.

இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து கொல்லப்படுவதால் அங்கிருந்து தமிழகத்திற்கு அகதிகள் வருவது தொடர்கிறது.

அண்மையில் டில்லிக்குச் சென்ற போது இது குறித்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியிடம் பேசினேன். இதுவரை நடந்தவை நடந்ததாக இருக்கட்டும். இனி நடக்கப் போவது நல்லவையாக இருக்க வேண்டும் என்று சோனியாவிடம் கூறினேன்.

எத்தனை துயரம் வாட்டி வதைத்தாலும் அதை மறந்து விட்டு மனித நேயத்துடன் இப் பிரச்சினையை அணுகவேண்டும் என்று அவரிடம் கேட்டுக்கொண்டேன்.

இப் பிரச்சினை தொடர்பாக சோனியா காந்தி எனக்கு எழுதிய கடிதம் இப்பிரச்சினை வெகு விரைவில் தீரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண எல்லோரையும் துணையாக வைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். எவ்வாறாயினும் இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என அவர் கூறினார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.